[முற்பகல் 9-30]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சடுகுடு விளையாட்டில் 'குடு குடு' என்று மூர்ச்சை அடக்கி கொண்டு கூறிவருவதுபோல், 'உடன்குடி வெத்திலையை, பறிச்சுட்டான், பிடிச்சுட்டான், விட்டுட்டான், என்று பாடிக் கொண்டே நெல்லை மாவட்டத்தில் உள்ளவர்கள் விளையாடுகி றார்கள். நாம் தற்போது பாரதிவிழாவைக் கொண்டாடிக் கொண்டு வருகின்றநேரத்தில், அவர் நினைவாக அவர் பாடிய

''உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை....'

என்று சொல்லிக்கொண்டு 'சடுகுடு' ஆடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விளையாட்டில் மூச்சைப்பிடித்துக்கொண்டு விளையாடவேண்டும் என்பது தான் அதிலே உள்ள மிக முக்கிய மான அடிப்படையாகும். மூச்சைப்பிடித்துக்கொண்டு தான் விளையாடுகிறானா என்று தெரிந்து கொள்வதற்குத்தன் 'சடுகுடு' என்று சொல்லிக் கொண்டு விளையாடுகிறார்கள். அதற்கு ஏற்ற வகையில் வேறு என்ன வார்த்தைகள் சொன்னால் பொருத்தமாக இருக்குமோ அதைச் சொல்லிக் கொண்டும் விளையாடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாரதியார் பாடலைப் பற்றிச்சொன்னார்கள். விளையாடுகின்றவர்களுக்கு அது பொருத்தமாக இருந்தால் பயன்படுத்திக்கொள்ளலாம். அதற்கு நாம் ஒன்றும் தடை விதிக்கப்போவது இல்லை. ஆனால் கவிதை பாடிக் கொண்டு விளையாட்டிலே தோற்று விடக் கூடாது.

### Facilities for learning Sanskrit

*Q. No.206—THIRU S. RAJARAMAN; Will the Hon. the Minister for Education be Pleased to state;—

(a) weather the State Government has been asked by that Centre about the facilities given in this state for the study of Sanskrit (b) if so, the details thereof

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) தமிழ் நாடு கல்விக் கூடங்களில் சமஸ்கிருத படிப்பிற்கு அளிக்கப் படும் ஊக்கம் குறித்து லோக் சபையில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கத் தேவையான விவரங்களை மைய அரசு கேட்டது. தமிழ்நாட்டில் பின்பற்றிவரும் இருமொழித்திட்டத்தின்படி தமிழ் அல்லது தாய்மொழியுடன் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. இவைகளைத் தவிர மூன்றாவது மொழி படிக்க இடமில்லை என்றும், சமஸ்கிருதம் தமிழ் நாட்டிலுள்ள 22 ஓரியண்டல் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது என்றும், இவைகளில் படிக்கும் மாணவர்கள் உதிவித்தொகை பெறுகின்றனர் என்றும் மைய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

LEGISLATIVE ... ALONE TRIUMPHS